554

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

MAY 1954

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம் மாம்பாக்கம்; சேயநு சித்திரை; 30—4—54 தளிர்-28

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

தாழி உடையலாமா?

பகுத்தறிவு வாய்ந்த நன்மக்களுக்கு இம் மறைபொருள் மின்னல், ஓர் உயர்ந்த வழிகாட்டியாய் இருந்து வருகிறது. 'குயவனுக்குப் பல நாள் வேலை கயவனுக்கு ஒரு நாள் வேலை' என்னும் பழமொழியிலும் அந் நுட்பத்தைக் காணலாம்.

பலநாள் உழைத்து ஓர் அழகான பாண்டத்தைக் குயவன் செய்து வைத்தால் அதனை அழிப்பதற்குத் தடிகாரனாகிய கயவனுக்கு ஒரு சிறு நேரமே போதுமானதாக இருக்கிறது. ஆக்கத்துக்குப் பலநாள் வேலை, அழிப்புக்கு ஒருநாள்வேலை! ஒரு மலைபோன்ற பெரிய வைக்கோல் போருக்கு ஒரு சிறிய தீப்பொறி, அழிக்கப் போதுமானதாய் இருக்கின்றது. கட்டுக்கோட்டான ஒரு நல்ல உடம்பைச் சிதைக்க ஒரு சிறிய நோய்ப்புழுவே போதும். விரைவில் அது பலவாய்ப் பெருகி உடம்பை அழிக்கின்றது. ஒரு குடம் நிறைய நல்ல தீம்பால் இருந்தாலும் அவ்வளவையும் பாழாக்க ஒரு துளி நஞ்சே போதும்.

பலநாள் உழைப்பெடுத்து நன்மைகளைத் தேடிவருவோரிடத்தில் ஒரு சிறிது தீமை இருந்தாலும், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாக அந் நன்மைகளெல்லாம் வீணாய் விடுகின்றன.

அப்படியே பெரியவர்கள் வாயிலிருந்து ஒரு பழிச்சொல் உண்டாகும்படி ஒருவன் நடக்கை இருந்தால், அவன் பலகாலும் உழைத்துத் தேடிய நல் அறங்கள் பலவும் ஆற்றல் குன்றிவிடுகின்றன. ஒருவன் ஒரு தீச்சொல் சொல்லிவிட்டால், சொல்லுகின்றவன் சொல்லப் பெற்றவன் ஆகிய இருதிறத்தாரிடத்திலும் அதுவரையில் சேர்ந்திருந்த நன்மைகளெல்லாம் அடியோடு சிதைந்து விடுதலும் கூடும்.

ஒன்றானுந் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின் வாழ்க்கையே நன்றாகாதாகிவிடும் என்று ஆசிரியர் கூறுவது எவ்வளவு நூற்றுக்கு நூறு உண்மையாய் இருக்கிறது! இம் மறைபொருளை அறிந்து விழிப்பாக வாழ்க்கை நடத்தவேண்டாமா?

ஒன்றானுந் தீச்சொற்
பொருட்பயன் உண்டாயின்,
நன்றாகா தாகி விடும்.

ஒன்றானும் — ஒன்றாவது, தீச்சொல் பொருள் பயன்—தீய சொற்களின் கருத்தால் விளையும் பயன், உண்டாயின் — பிறர்க்கு உண்டாய்விடுமானால், நன்று ஆகாதாகிவிடும் — அவரது வாழ்க்கை நலமல்லாதது ஆகிவிடும்.

ஒன்றானும் என்றது தீச்சொற்களுள் ஒன்றானும் என்றார். பல தீச்சொற்கள் சொன்னாலும் ஒன்றாவது தன் பொருட் பயனைத் திண்ணமாய் உண்டாக்கிவிடுமாதலின் 'தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்' என்று விதந்து விளக்கினார்.

நன்றாகாதாகிவிடும் என்றது, வாழ்க்கையிற் பல நன்மைகளைக் கெடுத்துத் தானே ஓங்கி நிற்கும் ஆகலின்; கலப் பாலுக்கு ஒரு துளி நஞ்சைப்போல ஒன்றானுந் தீச்சொல் அஞ்சப்பட்டது.

தீச்சொற்களாவன, பொய்ச்சொல், கோட்சொல், கடுஞ்சொல், பயனில் சொல் என்பவை.

வகைச் சுவரொட்டிகளைத் திரு. டி. கோவிந்தராசலு நாயுடு அவர்கள் அச்சிட்டுக் கொடுத்தார்கள்.

நிற்க, பேட்டைச் சொற்பொழிவுகளில் தொடர்ந்து ஈடுபட்டோர், திருக்குறள் முழுவதையும் பெரும் போக்காக அதன் ஒவ்வொரு பகுதியையும் ஆழ்ந்த அடிப்படை உண்மைகளின் தெளிவோடு அறிகிற வகையில், முறையே திருக்குறளின் ஒன்பது இயல்களையும் ஒன்பது நாட்களில் அமைந்த பேச்சாளரைக் கொண்டு பொதுமுறையிலும், ஆசிரியர் அவர்களைக் கொண்டு சிறப்பு வகையிலும் விளக்கச் சொற்பொழிவுகள் செய்விக்கப் பெற்றன. ஆசிரியரின் திருக்குறள் இயல்விளக்கச் சொற்பொழிவுகளைத் தொகுத்துச் சிறுசிறு நூல்களாக வெளியிடும் எண்ணமும் இருக்கிறது. உருவான ஒரு நற்பணிக்கு இச் சொற்பொழிவுகள் அடிகோலின என்பதில் ஐயமில்லை.

பல பேட்டைகளில் திருக்குறளைப்பற்றிச் சுருக்க விளக்கமாக நிகழ்ந்த இச் சொற்பொழிவுகளில் ஒன்பது நாளும் தொடர்ந்து ஈடுபட்டோர் ஏறக்குறைய இருநூறு பேராவது இருப்பர். அவர்களில் சிலருக்கு ஆசிரியர் வழி, திருக்குறள் முழுவதையும் விரிவாக அதிகாரத்திற்கு ஒருநாள் என அமைத்துத் 'திருக்குறள் வேள்வி' என்னும் பெயரால் சென்னை முழுதும் முறையே அங்கங்கே சில நாள் தொடர்பாகத் தங்கி ஓர் இயல் அல்லது அதன் ஒரு பகுதியாக நடத்திக் கேட்க வேண்டும் என்னும் ஆர்வமும் அரும்பி யிருக்கிறது.

இத் திருக்குறள் ஆக்கச் சொற்பொழிவுகளில் அக்கறை காட்டிக் கூட்டங்களுக்குத் தொடர்ந்தும், முடிந்தபோதெல்லாமும் வந்தும், இயன்ற ஆதரவுகள் செய்தும் செய்வித்தும் சிறப்பித்து ஊக்கமூட்டிய பெரியோர்கள் திரு. ஆ. கசபதி நாயகர் **B. A. B. L. M. L. A.**, திரு. சங்கரன் செட்டியார் (அறங்காவலர், மயிலைத் திருவள்ளுவர் கோயில்), திரு. எஸ். சுவாமிநாதய்யர், திரு. நடராச நாடார் (ஓய்வு பெற்ற மாவட்ட நடுவர்), திரு மயிலை மாணிக்கச் செட்டியார், உருக்குமணி குக்கர் திரு வ. சோமசுந்தரம் செட்டியார் **MA**, திரு. சச்சிதானந்தம் பிள்ளை **B. A. L. T.** முதலியோராவர்.

தொடக்க நாளாகிய 19-3-54 அன்று மயிலைத் திருவள்ளுவர் திருக்கோயிலில் ஆசிரியர் திருக்குறட் பாயிரம் பற்றி 'இயற்கை வணக்கம்' என்னும் தலைப்பில் எழுதியிருந்த கட்டுரை நூல் ஒன்று வெளியிடப்பட்டது. அன்றைய கூட்டம், குருகுலத்தின் 'சான்றாண்மை இயக்கம்' தொடங்கப் பெற்றுவிட்டதற்கறிகுறியாக அமைந்து மிக்க உணர்ச்சியைக் கொடுத்தது.

ஆசிரியர் அன்று திருக்குறட் பாயிர உள்ளுறையை விளக்கிச் சான்றாண்மை இயக்கமே திருக்குறள் உட்கிடை என்றும், பாயிரத்தில் அறன்வலியுறுத்தல் என்பதும் நீத்தார் பெருமைக்குக் காரணமாவதும் அதுவே என்றும், அப் பெருமையே எங்கும் மறைந்து நிறைந்திருக்கிற தெய்வத் திருவருளை மழைமுகமாக வெளிப்படுத்தி உயிர்களுக்குப் பண்டங்களின் வழிப் பல்வேறு நல்லுணர்ச்சிகளை உண்டாக்கி ஓம்பி உலகை உயர்த்தி வருகின்றது என்றும் தெளிவு செய்தார்கள். குருகுலம் 'சான்றாண்மை இயக்கம்' என்பதையும் தெரிவித்தார்கள். அன்றைய கூட்டத்துக்கு இந்து அறநிலைக் கழக ஆணையாளர் திரு. சங்கர வடிவேல் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

குருகுலச் செய்தியாளர் கீழ்க்காணும் கருத்துக்களைச் சொல்லி நன்றி கூறினர். சான்றோர்கள் உறைவிடம் திருக்கோயில்களும் திருமடம் முதலிய அறநிலையங்களுமாகும். சான்றாண்மை இயக்கத் தொடக்கம் போன்ற இக் கூட்டத்துக்குத் தலைவர் மிகவும் பொருத்தமானவராக அமைந்திருக்கிறார். அவைகளிற் பெரும்பாலனவற்றில் இன்று சான்றோர்களே இல்லாமலும் அவர்களுக்கு அங்கே முதல் மதிப்புத் தரப்படாமலும் இருப்பதாலேயே இந்நாட்டுச் சமய அரசியல் துறைகளில் பெருங் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குழப்பங்கள் அகலக் கோயில்களைத் திருக்கோயில்களாக, மடங்களைத் திருமடங்களாக, சான்றாண்மை இயக்கப் பீடங்களாக மாற்றியமைத்தல் வேண்டும். குருகுலத்தார் இவ்வகையில் தம்மாலியன்ற அளவு கருத்திருத்திப் பணி செய்து வருகிறார்கள். இத் திருக்குறட் பரப்புரைக் கூட்டங்கள் கூட அதனாலேயே பெரும்பாலும் திருக்கோயில்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கின்றன. திருக்கோயில்களில் இத்தகைய சான்றாண்மை இயக்க, சமய விளக்கக் கூட்டங்கள் பெருவாரியாக நடைபெற வேண்டும். களியாட்டக் கச்சேரிகள் ஒழிந்து, திருமுறை திருவாய்மொழி இசையரங்குகள் நிகழ வேண்டும்; வெற்றாரவார வீண் செலவுகள் குறைந்து, அறச் செலவுகள் மிகுதிப்படவேண்

டும். அவற்றின் ஆணையாளராக உள்ள தலைவர்கள் இவைகட்கெல்லாம் ஆவன செய்யவேண்டும். இந்நாட்டு இளைஞர்கள் சார்பில் இவ் வேண்டுகோளைச் செய்து கொள்ளுகின்றேன். குருகுலத்தின் தொண்டுகட்குச் சான்றாண்மை இயக்கப் பணிகட்குத் தலைவர் போன்றவர்கள் நல்லாதரவும் ஊக்கமும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திருவேட்டீசுரன் பேட்டை, சூளை, பெரியமெட்டு, இராயபுரம், சிந்தாதிரிப் பேட்டை ஆகிய இடங்களில் முறையே சிறப்பாக நிறைகுடமும், வாத்தியமும் வைத்து ஆசிரியர் தலைவர் சொற்பொழிவாளர்களை வரவேற்றும், திருக்குறளை யானை மேல் வெள்ளி அம்பாரியிலும், அழகிய சப்பரத்திலும் ஏற்றி ஊர்வலம் செய்வித்தும், ஆசிரியர் தலைவர் முதலியோர்க்கும் முதன்மையான வேறு பிறர்க்கும் தொண்டர்களுக்கும், குருகுலத்தார் பலருக்கும் சிற்றுண்டிகள் வழங்குவித்தும் சிறப்புகள் செய்யப்பெற்றன.

பேட்டை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்கள், முன்னின்று நடத்தியவர்கள், கலந்துகொண்டு சிறப்பித்தவர்கள், பிற சிறப்புகள் பற்றிய விவரக்குறிப்புகள் வேறோரிடத்தில் இருக்கின்றன. அவற்றைப் பற்றிச் சுருக்கி எழுதினும் விரியுமாதலின் ஈண்டு இதோடு விடப்பட்டது.

பேட்டை நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்திய பேரன்பர்களை எம்மொழியால் பாராட்டுவது? அவர்களுக்கு எவ்வாறு நன்றி கூறுவது? அவர்களின் விரிந்து பரந்த நல்லுள்ளம் அவர்களை நன்கு வாழ்விக்கும்.

இனி, முன் ஒன்பது நாள் நிகழ்ச்சிகளின் நிறைவாகவும், பயனாகவும் 28-3-54 அன்று நிகழ்ந்த குருகுல விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னை மல்லீசர் திருக்கோயிலும், அதை அடுத்துள்ள சென்னை கேசவப் பெருமாள் கோயிலும் என்றுமே கண்டிராத பெருங் கூட்டம் அன்று முழுவதும் அங்குக் கூடியிருந்ததாம். இதை அக் கோயில் அதிகாரிகளும், அங்குள்ள பெரியோர்களுமே கூறி வியந்துகொண்டிருந்தனர். பல சிறப்புக்களை அக் கோயிலிலும் நடத்தி வரும் பெருஞ் செல்வர் நகை வாணிபர் திரு. கோவிந்தராசலு நாயுடு அவர்கள் (நம் விழாவின் வரவேற்புத் தலைவர்) இதைக் கூட்டத்திலும் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள்.

நிற்க, அன்றைய கூட்டத்திற்கு உடல் நலக் குறைவால் முதலமைச்சர் திரு சி. இராசகோபாலாச்சாரியார் வரவில்லை. அமைச்சவை நெருக்கடி முதலிய காரணங்களும் குறுக்கிட்டு விட்டன. திரு கே. வெங்கடசாமி நாயுடுவும் திரு வி. கே. இராமசாமி முதலியாரும் (M. L A) வரமுடியாமற்போயிற்று. மற்றப்படி அன்றைய நிகழ்ச்சிகள் எல்லாம் அழைப்பிதழிற் குறிப்பிட்டபடியே மிகச் சிறப்பாக நடைபெற்றன!

முற்பகலில் பானு ஓவியர்கள் முன்வந்து மனமுவந்து வழங்கிய எடுப்பான திரை வண்ணத் திருவள்ளுவர் ஓவியத் திறப்பும், தலைவர் பெரியோர்களின் உரைகளும் நடைபெற்றன. உரை விவரம் தனியே காண்க.

பிற்பகலில் பொதுவாகப் பண்டைக் குருகுலங்கள் அவற்றின் கல்வி முறைகள் பற்றிய விரிவுரைகளும், பெரியோர்களின் வாழ்த்துரைகளும் நிகழ்ந்தன. உரை விவரம் பின்னர் வரும்.

இவற்றோடு குருகுலத்தாரின் பல்வேறு திறமைகளைக் காட்டும் கண்காட்சி ஒன்றும் விளம்பரத்தில் குறிப்பிடாத நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டிருந்தது.

மிகக் குறுகிய நேரத்தில் நினைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அக் கண்காட்சி பலரும் பாராட்டு முறையில் அமைந்திருந்தது. ஆடவரும் பெண்டிருமாகக் குருகுலத்தார் சிலர் தம் கைத்திறமும், நுண் கலைத்திறமும் வாய்ந்த தையல், பின்னல், மணிவேலை, ஓவியம், நெசவு, தச்சு முதலிய கைத்தொழிற் பண்டங்கள் அதில் இடம் பெற்றிருந்தன.

கண்காட்சியிற் பங்கு கொண்டோர்க்கெல்லாம் குருகுலச் சார்பில் ''நற்சான்றுகள்'' வழங்கவும், சிறப்பான பண்டங்களை அமைத்த எழுவர்க்கு நூற்பரிசுகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பெற்றன. இவர்கள் பெயர்ப் பட்டியலும் தனியே வேறோரிடத்தில் இருக்கின்றது.

குருகுலத்தைப் புதிய முறையில் திருக்குறட் செயலகமாக அமைக்கவிருப்பது பற்றிய பலருடைய ஐயங்களைத் தெளிவிக்கிற முறையில் குருகுலத்தின் அடிப்படை அமைப்பு முறைகளையும் நோக்கங்களையும், செயல் முறைகளையும் நன்கு விளக்கி, ஆசிரியர் அவர்கள் வாழ்த்தியல் முறையில் நன்றிகூற, விழா இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது.

விழாவின்போது அதன் வரவேற்புத் தலைவர் திரு. டி. கோவிந்தராசலு நாயுடு அவர்கள் ரூ 101ம், சூளை திரு. ம. மு. வேங்கடராம பிள்ளை அவர்கள் ரூ 111-ம் குருகுலத்திற்கு நன்கொடை கொடுத்து மகிழ்ந்தார்கள்.

விழாவிற் கெழுமிய விழுமிய மொழிகள்

(குறிப்பு:-19-3-54 முதல் 27-3-54 வரை நிகழ்ந்த திருக்குறட் சொற்பொழிவுகளைத் தொகுத்து முல்லைக் கொடியில் இயன்றபோதெல்லாம் வெளியிட்டுச் சிறு சிறு நூல்களாக்க எண்ணியிருத்தலின், ஈண்டு 28-3-54 அன்று நிகழ்ந்த விழாச் சொற்பொழிவுகளின் முதன்மையான கருத்துக்கள் மட்டும் கருத்திருத்தப்படுகின்றன.)

திருப்புகழ்மணி: வழக்கம் போல் திருப்புகழ்மணி அவர்கள் தலைமையில் ஞாயிறு அடியார் திருக்கூட்டத்தின் சார்பில் வழிபாடு நடைபெற்றது. தலைவர் முதலியோர் வருகைக்குப் பின் 9-45 மணிக்குத் திருப்புகழ்மணி அவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடல் இசைத்து விழாவைத் தொடங்கினர். "உணர்ச்சி இனிமைதான் சிறந்தது; வாழ்வின் பெரும்பேறு. அதைப் பெறுதற்காகவே எல்லா முயற்சிகளும் நிகழவேண்டும். அவ்வுணர்ச்சி இனிமை வாய்க்க உங்களை வணங்குகின்றேன்." என்று தெரிவித்துக் கொண்டார்கள்.

திரு S. சுவாமிநாதய்யர் வரவேற்புரை:

சென்னை மல்லீசுரர் கோயிலின் பெருமைகளையும் அங்கே நாடோறும் சமய விரிவுரைகள் நடைபெற்று வரும் சிறப்புகளையும் அதன் மானேஜர் திரு. சுப்பிரமணிய ஐயர் திறத்தையும் குறிப்பிட்டுச் சொல்லி, குருகுலத்தைப்பற்றியும் அதன் சார்பிற் கடந்த ஒன்பது நாட்கள் நடைபெற்ற திருக்குறட் பரப்புரைபற்றியும் தெரிவித்துத் தலைவராகிய அமைச்சர் முதலியோர்களை வரவேற்றுப் பேசினர்.

ஆசிரியர் கருத்துரை: நான்கு ஆண்டுகளுக்குமுன் மாம்பாக்கத்தில் குருகுல விழா மாநில விழாவாக நடைபெற்றது. அது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தோடு வேலைகள் நடக்கின்றன. மீண்டும் அடுத்த ஆண்டில் அங்கே இன்னும் பெரிய விழா இந்திய விழாவாக நடைபெறவேண்டும். இடையில் இங்கே ஒரு விழா. சென்னையில் குருகுலத்தார் பெரும்பாலார் இருக்கிறார்கள் என்பதற்காக!

குருகுலத்தின் நோக்கத்தை ஒன்றாகச் சொன்னால்– அது, நல்லுணர்ச்சிகளை நாட்டில் பரவச் செய்வது என்று சொல்லிவிடலாம். குருகுலம், அதற்காக உள்ள பயிற்சி நிலையம்; அது ஒரு பெரிய அமைப்பு; புதிய அமைப்பு!

நன் மக்கள் பெருகவேண்டும் பொது மக்கள் சிறப்பு மக்களாக வளரவேண்டும். பொருளில் குறைந்தார் பொருளில் உயரவும், கல்வி தெளிவு அருள் பணி நிலைகளில் கீழ் நிலையில் உள்ளவர் மேல் நிலையடையவும் வேண்டும். இந்த வளர்ச்சி, பொருளால் அரசால் மட்டும் வராது. இரண்டையும் கடந்த சான்றோர்களால் தான் வரும். அவர்கள் அரசுக்கும் பொருளுக்கும் அப்பாற்பட்டவர்கள். அவற்றிற்கு அஞ்சாது மயங்காது அறத்தை வற்புறுத்தக் கூடியவர்கள். சான்றாண்மையுடைய பெரியவர்கள். அவரவர்கள் சூழ் நிலைக்கேற்றபடி ஞானிகள், தவசிகள், அடியார்கள், முனிவர்கள், ரிஷிகள் என்று அவர்கள் வழங்கப்படுவார்கள். அவர்கள் அரசினர்க்கும் நாட்டு மக்களுக்கும் உதவியாக இருப்பவர்கள். அப்படிப்பட்டவர்களை மதித்துப் போற்றி வளர்த்த நாடு இந் நாடு. பண்டு அவர்கள் வளர்த்ததால் இந்நாடு வளர்ந்தது; உயர்நிலையில் வைகியது; உலகுக்கே வழிகாட்டியது. அவ்வுயர் நிலையில் மீண்டும் அடையவேண்டுமானால் சான்றோர்களை அறிந்து அவர்களைப் போற்றி அவர்கள் வழி ஒழுக நாடு முற்படுதல் வேண்டும்.

திருவள்ளுவர், திருக்குறளில் சான்றாண்மை இயக்கத்தையே விளக்கியிருக்கிறார். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்நூல், உலகுக்கு ஒரு நூலாய், எல்லார்க்கும் ஆனதாய், வாழ்க்கை நூலாய் இருக்கிறது. ஆகவே அதனைச் செயல் நிகழ்த்திக் காட்டவேண்டும். அதன்படி வாழ்க்கை நடத்தி வாழ்ந்து காட்டவேண்டும்.

நம் குருகுலம் அதற்காகவே அமைந்திருக்கிறது அது நாட்டுக்கும் அதன் மொழிக்கும் நாட்டு மக்களுக்கும் அவர்களின் ஆட்சிக்கும் உதவியானது. "கடன் என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு" என்றபடி நல்லுணர்ச்சிகளை யெல்லாம் நல்லவைகளை யெல்லாம் சான்றாண்மை நெறியில் வளர்ப்பது.

குருகுலத்தின் பணி, தொகையால் இரண்டு; வகையால் மூன்று.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

இருந்து செய்தல், உலவிச் செய்தல் தொகை; உடல், உரை, உள்ளங்களால் செய்தல் வகை.

இருந்து செய்தலுக்கு இடம் மாம்பாக்கம். உலவிச் செய்தல் சென்னையைச் சிறப்பிடமாகக் கொண்டு நாடெங்கும் நிகழ்தல்வேண்டும்.

உடம்பின் தொண்டு சிறப்பாக மாம்பாக்கத்தில்; உரைத் தொண்டு சிறப்பாகச் சென்னையில்; உள்ளத் தொண்டு சிறப்பாகத் திருக்கழுக்குன்றத்தில்!

மக்கள் தம் உடம்பைமட்டும் வளர்த்தால் போதாது. பொருளை, அறிவை, அருளை, பணியையும் வளர்க்கவேண்டும் என்பது குருகுலத்தின் எண்ணம்.

சென்னையில் எத்தனையோ குடும்பங்கள் குருகுலத்திற் சேர்ந்து நற்போக்கில் உறுதி கொண்டு சிறந்து வருகிறார்கள்.

வாழ்வில், 'இக் குருகுலத்தின் சிறப்பு எவ்வளவு? இதன் இடம் என்ன?' என்பது தெரியவேண்டும். எல்லாருக்கும், சிறப்பாகத் தக்கோர்க்கும், அரசியல் தலைவர்களுக்கும் தெரிதல் வேண்டும். நல்லது, இனியது, உயர்ந்தது, எளியது என்று தெரிந்தால் இணங்கவும் வேண்டும். பலரை இணக்கவும் வேண்டும். இது கடமை. இதனால் நாடும் உலகமும் நன்மையுறும்.

(தலைமை தாங்கிய கல்வி, நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் தகுதிகளை எடுத்துச் சொல்லி, பள்ளி ஆசிரியர்களின் நிலைமை ஓரளவு உயர்த்திய அவர்களையும், விழாவைச் சிறப்புற நடத்தப் பல்லாற்றானும் முயன்றுதவிய திரு. அருணாசல நாடார், திரு. கோவிந்தராஜலு நாயுடு, திரு. கஜபதி நாயகர் முதலியவர்களையும் ஆசிரியர் பாராட்டினார்)

மாநில அமைச்சர்
திரு. சி. சுப்பிரமணியம்
அவர்களின் தலைமை உரை:

புலவர்கள் சான்றோர்கள் பலர் இருக்க என்னைத் தலைமை ஏற்கும்படி கேட்டதற்கு நன்றி. இது என்னுடைய பேறு. இங்கே ஆயிரக்கணக்கில் எல்லோரும் நல்லவர்களாக ஆக வேண்டும் என்னும் ஒரே நோக்கோடு கூடியிருக்கிறீர்கள். அரசியல் தொடர்புள்ள யான் அடிக்கடி சட்ட சபையில் பார்க்கும் கூட்டத்துக்கும் இங்கே பார்க்கும் கூட்டத்திற்கும் வேறுபாடு உண்டு. உங்கள் முகங்களில் அன்பும் ஆர்வமும் பொழிகின்றன. சான்றோர் முன், இந்நிலை இயல்பாக உண்டாயிருக்கிறது. நாட்டில் நடைபெறும் எல்லாக் கூட்டங்களும், சட்ட சபைகள் கூடத்தான், இப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். சான்றோர்கள் வழியில் நின்றால், எங்கும் சான்றோர்கள் இருக்கும்படி பார்த்துக் கொண்டால் இந்நிலை உண்டாகும்.

இங்கே நான் வந்தது உங்கள் நல்வாழ்த்தைப் பெற்று நல்லவனாகி உயரவேண்டும் என்னும் எண்ணத்தால்தான். ஆசிரியர் குருகுலத்தின் கொள்கைகளை நன்றாக விளக்கினார். திருக்குறள் அடிப்படையில் அது அமைந்திருக்கிறது. குறளின் அடிப்படை உண்மைகளை வாழ்வில் பழக்கும் பயிற்சிச் சாலை குருகுலம்! மாம்பாக்கத்திலுள்ள அதன் அமைப்புகளைப் பார்க்கும் பேறு இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. கூடிய விரைவில் கிட்டும் என்று நம்புகிறேன்.

திருக்குறளைத் தெய்வ உணர்வோடு ஒன்பது நாட்கள் சிறப்பாகப் பரப்பி விழா நடத்தப் பெற்றது. இது மிகவும் போற்றத் தகுந்த செயல்.

தெய்வ நம்பிக்கையின் அடிப்படை உடையது திருக்குறள். திருக்குறளை ஒப்புக் கொள்பவர்கள் கடவுளை ஒப்பவேண்டும். இக்காலத்தில் சிலர் திருக்குறளைப் போற்றுவதாகக் கூறிக்கொண்டு தெய்வத்தை மறுக்கிறார்கள். முன்னால் உள்ள எண்ணை விட்டு அடுத்துள்ள சுன்னங்களை மட்டும் கணக்குப் பார்ப்பது போல இருக்கிறது அவர்கள் செயல்.

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்...என்கிறார் திருவள்ளுவர். இப் பிறப்பை இனிதே கழிக்கவும், இதனைக் கடந்த பின்

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

மறுமையில் நல்வாழ்க்கையை அடையவும் இறைவன் திருவடிகளாகிய புணைவேண்டும். தெய்வ நம்பிக்கையில்லாதார் திருக்குறளைப் போற்றிப் பயனில்லை.

வாழ்க்கை வெற்றிக்கு மன அமைதி முதன்மையாக வேண்டும். தெய்வ நம்பிக்கை மன அமைதிக்கு உதவுவது போல் வேறு எதுவும் உதவுவதில்லை. நம்மை நாம் சரிசெய்து கொள்ளவும், நன்னெறியில் செலுத்திக் கொள்ளவும், கடவுள் நம்பிக்கை கட்டாயம் வேண்டும். அதனை அடிப்படையாக வைத்து நல்லோரியக்கம் நடத்தும் குருகுலம் ஓங்க, நாம் நம்மால் ஆனதைச் செய்தல் வேண்டும்.

திருவள்ளுவர் படத்திறப்பு—
கல்கி ஆசிரியர் உரை:

திருக்குறளை எவ்வளவு வேண்டுமானாலும் புகழலாம். அவ்வளவுக்கும் அதில் இடமுண்டு. அதிற் பல அழகுகள்— அதில் ஒன்று "ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி வேதப் பொருளாய்" என்பது. சுருங்கிய சொற்களாலானது திருக்குறளில் பெரும்பாலும் எளிய சொற்கள். ஒரு சொல்லே ஒரு பாடலில் இரண்டு மூன்று முறையும் வரும்.

உதவி வரைத்தன்று உதவி— என்பதில் உதவி என்னும் சொல்லே மூன்று முறை வருகிறது நன்றி மறப்பது நன்றன்று... ....நன்று என்னும் சொல் நான்கு முறை............ ... குருகுலம் திருக்குறள் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றார் ஆசிரியர். அவர் பேச்சிலேயே அது ஒருவாறு தெரிந்துவிட்டது. நம் கல்வி அமைச்சர் தொடக்கப்பள்ளி ஆசிரியருக்கு ஏதோ சிறிது ஊதியம் உயர்த்தியிருக்கிறார். இதைப்பற்றி உயர்த்தவேண்டிய அளவுக்கு இது மிகவும் குறைந்தது என்று கண்டிப்பவர்களும் உண்டு. ஆனால் நம் ஆசிரியரோ திருக்குறள் பண்பில் மேலே சொன்ன இரண்டு குறளின் பொருள்களை ஒட்டிப் பாராட்டிப் பேசினார். 4 ஆண்டுகளுக்கு முன் மாப்பாக்கம் குருகுல விழாவுக்குப் போயிருந்தேன். அதையும் பாராட்டினார்.......... இப்படிப்பட்ட பண்பாடுள்ள குருகுலத்தார்க்கு உதவினால் நல்லது. உதவ வேண்டியது நம்முடைய கடன். பாலு ஓவியர்கள் நேரில் தெரியாதிருந்தும் இவர்களுக்கு இந்தப் பெரிய திருவள்ளுவர் படத்தை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய நன்றியும் பாராட்டுதலும் உரியவாகும் (குருகுலத்திற்கு ஆதரவைத் திரட்டும் நோக்கோடு, சொற்பொழிவாளர், அனைவரையும் ஊக்கப்படுத்தி நகைச்சுவையுடன் பேசி மகிழ்வித்தார்)

திரு ரா. பி. சேதுப்பிள்ளை
அவர்களின் உரை:

விழாவின் சிறப்பு என்னை மிகவும் மகிழ்விக்கிறது. அமைச்சர் திரு. சுப்பிரமணியம் நல்ல தமிழ்த் தொண்டர். திருநீறு பொலியும் திருமுகத்தோடு அவர்கள் இருந்து திருக்குறள் பற்றிப் பேசக் கேட்டபோது மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன். கல்கி அவர்கள் நல்ல ஆதரவு காட்டிப் பேசினார்கள். குருகுலத்தைப்பற்றி நன்கு அறியும்படி அவர்கள் செய்யக் கூடியவர்கள்—செய்வார்கள்.

ஆசிரியர் இளவழகனார் என்றதும் சங்கச் சான்றோர் நினைப்பு எனக்கு வருவதுண்டு. சங்கப் புலவர்கள் பெயர்களை அவர்கள் ஊரின் பெயருடன் இணைத்து வழங்குவது வழக்கம். மாங்குடி மருதனார், நல்லூர் நத்தத்தனார், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்பனவைபோல. இப்போது இசைத்துறையிலுள்ளவர் அது போல் வழங்கிவருகின்றனர். அரியக்குடி, செம்மங்குடி, சித்தூர்...என்று. இயற்புலவர் அவ் வழக்கத்தைப் போற்றவில்லை. ஆசிரியர் பெயர் இனி மாம்பாக்கத்தோடு இணைத்து வழங்கப்படும்; வழங்கவேண்டும்.

நான் குருகுலத்தைப் பார்த்தேன்; மகிழ்ந்தேன். குறள் அடிப்படையில் அது இயங்குகிறது. கடவுளை நம்பாதார் திருக்குறளைப் போற்றிப் பயனில்லை என்றார் அமைச்சர்—ஆசிரியர் இளவழகனார் உரிய முறையில் திருக்குறளைப் போற்றிப் பரப்பச் செயற்படுத்தி வருகிறார். இத்தகைய ஒழுக்கமுடையவர்கள் சொல் உலகத்துக்கு வேண்டும். ஆகவே, நாம் அவரவர் நிலைக்குத் தக, எண்ணி எண்ணியும், அள்ளி அள்ளியும் கொடுத்துக் குருகுலத்துக்கு ஆக்கம் செய்ய வேண்டும்.

முற்பகல் நிகழ்ச்சி இத்துடன் முடிந்தது. பிற்பகல் கூட்டத்துக்குச் சைவப் பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் குருகுலத்தார் வேண்டுகோட்கிணங்கித் தலைமை தாங்கிக் கூட்டத்தைச் சிறப்புற நடத்திக் கொடுத்தார்கள். 'பண்டைக் குருகுலங்கள்' பற்றிய திரு ஆலால சுந்தரனார் உரையும், 'குருகுலக் கல்வி' பற்றிய திரு. கி. வா. ஜகந்நாதய்யர் உரையும், பன்னிரண்டு பணித்திட்டங்கள் பற்றிய திரு. செங்கல்வராயர் உரையும், சான்றோர்களைப் பற்றிய ஆசிரியர் உரையும்

விழாப் பற்றிய சில விளக்கங்கள்

சென்னையில் சிறப்பாக நடைபெற்ற குருகுல விழாப்பற்றி அன்பர் சிலர் கேட்ட கேள்விகளுக்கான விடைகள் கேளாதோர்பலரின் ஐயங்களையும்போக்கக் கூடியவைகளாகவும், குருகுலத்தைப்பற்றிய நல்விளக்கங்களாகவும் இருத்தலின் அவைகள் அப்படியே கீழே தரப் பட்டுள்ளன.

வினாக்கள்:— குருகுலம் மாம்பாக்கத்தில் மதுராந்தகத்தை அடுத்துச் சென்னைக்கு 52 கல் தொலைவில் இருக்கிறது; அதனுடைய விழா சென்னையில் நடக்கிறதே, விழாவின் நோக்கமென்ன? இதுபோல் விழாக்கள் எவ்வெப்போது நடக்கும்?

விடைகள்: குருகுலம் என்றவுடன் இந்தக் காலத்தில் பலர் கொள்ளுகிற பொருள் ஒரு பள்ளிக் கூடமும் அதை அடுத்து மாணவர் உறை விடுதியும் தொழிற் பயிற்சிக் கூடமும் இருக்கிற ஓர் அமைப்பு என்பது. அதனால்தான் மாம்பாக்கத்தில் அவைகள் இருக்கிறபோது சென்னையில் விழாவுக்கு என்ன தொடர்பு எனத் தோன்றுகின்றது.

குருகுலம் என்ற சொல்லின் பொருளும் அது இயங்கவேண்டிய முறையும் அவற்றிற்கேற்ப நம் குருகுலம் எப்படி எப்படி இயங்குகின்றது என்பதும் நம் குருகுலத்தின்சூழல்களும் தெரிந்திருந்தால் இவ்வாறு நினைவு எழ இடமில்லை.

குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் சூழலிலிருந்து பயிலும் மாணவர் கூட்டமே குருகுலம் என்பது; அக் கூட்டத்தார் தமக்குள் மிகவும் நெருங்கியவர்களாய், வாழ்க்கையிலும் உறவு பூணத் தக்கவர்களாய் இருப்பர்.

உண்மையில் இத்தகைய குருகுலக் கூட்டங்கள் தம் உணர்ச்சிகளிலும் கொள்கைகளிலும் ஒக்கவைகளாக, வேறு சாதி மத வேறுபாடு கருதாதவைகளாக, இருக்கும்.

குருகுலத்தார் என்றால் அவர்கள் சிறுவர்களாகவே இருக்கவேண்டும் என்றும், வெறும் எழுத்துக் கல்வி மட்டுமே பயில்வோர் என்றும், எல்லாரும் ஒரே இடத்திலேயே இருக்கவேண்டும் என்றும் கட்டாயம் இல்லை. எங்குள்ளவர்களும் வாழ்க்கையில் எத்திற நிலையிலுள்ளவர்களும் குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் சூழலில் தொடர்பு கொண்டு அவர் கொள்கை வழி நின்று தம் வாழ்க்கையை நன்னெறியில் நடத்தி வரலாம். அதோடு அவ்வாசிரியர் இருக்கின்ற இடத்தில் அவரோடு தொடர்பு கொண்டுள்ளவர்களின் குழந்தைகள் பலர் ஒருசேர இருந்து எழுத்துக் கல்வியோடு வாழ்க்கைக் கல்வியும் தொழிற் கல்வியும் வேறு கலைக் கல்வியும் பயிலுகின்ற அமைப்பு ஏற்படுவதும் இயல்பும் மகிழத் தக்கதுமே ஆகும்.

மாம்பாக்கம் குருகுலம் இவ்வகையில் எல்லாம் உருவாகி வரும் ஒரு பேரமைப்பு என்பதை அன்பர்கள் மனத்துட் கொள்ளவேண்டும்.

ஆசிரியர் இளவழகனார் அவர்களைத் தலைவராகக் கொண்டு அவர்கள் கருத்துவழி இயங்கி உருவாகி வரும் இக் குருகுலத்தின் சார்புடையவர்கள் பலர் தமிழகத்தில் ஆங்காங்கு இருக்கின்றனர்.

சென்னையில் இதன் சார்புடையவர்கள் நூற்றுக்கணக்கிலிருந்து மேலும் பெருகி வருகின்றனர். காரணம், ஆசிரியர் பல ஆண்டுகளாகச் சென்னையிலுள்ள பல்வேறு தமிழ், சமய அமைப்புகளுடன் தொடர்புகொண்டு அடிக்கடி அங்கு வந்து தொண்டாற்றுவதேயாகும்.

நம் குருகுலத்தில், தமிழ் ஆங்கிலக் கல்வியில் தனித்தனியாகவும், இரண்டிலும் இணைப்பாகவும் வல்ல அறிஞர்களும், எழுத்தாற்றல் பேச்சாற்றல் உடையவர்களும், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், தையல், பின்னல், முதலிய கலை நுணுக்கத் தொழில்களிலும் தச்சு, வார்ப்படம், நிழற் படம், அச்சு முதலிய கைத் தொழில்களிலும் பழக்கமுடைய வர்களும், சிறந்தவர்களும் இருக்கின்றனர்.

(வரும்)

தொடர்ந்து முல்லைக் கொடியில் வெளிவரும்.

குருகுலச் செல்வியார் திரு. காஞ்சனமாலை அம்மையார் அவர்கள், குருகுலப் பாட்டினைத் தமது இனிய குரலில் இன்னிசையுடன் பாடி அவையோர் அனைவரையும் மெய்ம் மறக்கச் செய்தார்கள்.

தணிகைமணி அவர்கள் தம் வாழ்த்துரையின் போது வாழ்த்துப்பாடல் பாடிப் படித்தார்கள். (பாடல் பின்வரும்) சுருக்கமாய்த் 'தெளிவுள்ளவர்கள் எச் செயலையும் இனிது நிறைவேற்றுவர் என்பதில் ஐயமில்லை....நற்பேறுடையவர்கள் அதில் பங்கு கொள்வர்' என்று குறிப்பிட்டார்கள்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. க. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)

திருவாசகமும் சிவானுபவமும்

புலவர் முருகவேள். B O. L

"சீரடி யார்கள் சிவானு பவங்கள் தெரிந்திடும் ஆகாதே"

கவிதையும் அனுபவமும்:

திருவாசகம் ஒருசிறந்த கவிதை நூல். கவிதை நூல்களிலெல்லாம் மிகவும் தலை சிறந்த கவிதை நூல்! சிறந்த கவிதைகள் எல்லாம் ஏதேனும் ஓர் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே எழுவனவாகும். அனுபவம் என்னும் சொற்கு 'அழுந்தி யறிதல்' எனப் பொருள் கூறுவர் சிவஞான முனிவர் கவிஞன் தான் ஒரு பொருளின்பால் ஈடுபட்டு அழுந்தி யறிந்த உள்ள நிகழ்ச்சி அல்லது அனுபவத்தினைப் புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படச் செய்யும் திறனே கவிதை எனப்படும். கவிதையானது கவிஞனின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றி, அவ் வனுபவத்தைப் பிறரும் ஓரளவு உணருமாறு செய்யும் கருவியாகத் திகழ்கின்றது. நாள்தோறும் புதிய புதிய பொருள்களைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்து' வரும் பல திற அனுபவங்களின் தொகுப்பே வாழ்க்கையாக அமைகின்றதாகலின், அவ் வாழ்க்கையனுபவங்களை ஒவ்வொரு வகையாக வெளியிடும் கவிதைகளுக்கு அனுபவம் என்பதே இன்றியமையாத அடிப்படையும் உயிர்ப்புமாக இருக்கின்றது. "உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" "நெஞ்சின் மிக்கது வாய் சோரும்" என்பன போல வரும் கூற்றுகள் இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும்

அகப்பொருள் காதலனுபவம்:

இவ்வனுபவங்களை ஒட்டியே பழந்தமிழ்ச் சான்றோர்கள் கவிதைகளை அகம் புறம் என இரு கூறுபடுத்தி வழங்கி வந்துள்ளனர். எளிதிற் பிறரெவர்க்கும் எடுத்துரைத்து உணர்த்துதற்கு அமைந்த புறப்பொருளனுபவம் பற்றிய செய்திகளைக் கூறும் கவிதைகள் புறம் எனவும்; "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறப்பதாய், அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இலவாறு இருந்தது எனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகரத் தருவதாகிய காதலின்ப அனுபவம் பற்றிய கருத்துக்களைப் பொருளாகக் கொண்ட கவிதைகள் அகம் எனவும் சங்கச் சான்றோர்களால் போற்றப் பெற்றன. போரும் காதலும் என்னும் இவ்விரண்டுமே பெரும்பாலும் சங்க காலப் புறப் பொருள் அகப்பொருட் பாடல்களில் பலபடியாக விரித்துணர்த்தப் பெற்றுள்ளன. அகம் புறம் என்னும் இவ்விரண்டு கூற்றினும் சங்க காலப் புலவர்கள் அகப்பொருட் கவிதைகளையே மிகுத்துப் பாடியுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததொன்று. அவற்றின்கண் பெரும்பாலும் சிறப்பாகப் பாடப்பட்டிருப்பது காதலின்ப அனுபவமேயாம் என்பதனையும் எவரும் உணர்வர்.

திருவாசகம் கூறும் சிவானுபவம்:

ஆனால், திருவாசகப் பாடல்களோ சங்ககாலப் பாடல்கள் வெளியிடும் காதலின்ப அனுபவத்தினின்று வேறுபட்ட புதியதொரு பேரனுபவத்தினை விளக்குவனவாக உள்ளன. அவ்வனுபவம் பிற புலவர்களால் வெளியிடப்படாததொரு சிறந்த புதிய அனுபவமாக உள்ளது. ஐம்பொறி வழிப்பட்ட அனுபவமாக இல்லாமல், அதனைக் கடந்து நின்று மேம்பட்டொளிரும் அனுபவமாக அஃது இலங்குகின்றது. எந்தப் பொருள் எல்லாப் பொருள்களையும் விட மிக மிக மேலானதோ அந்தப் பொருளின் அனுபவமாகத் திகழ்கின்றது. உயிர்களெல்லாம் இறுதியாக எய்தத் தகும் உயர்வற உயர்ந்த பெறவரிய பேரின்ப அனுபவமாய்ப் பிறங்குகின்றது. அவ்வனுபவமே சிவானுபவம் என மணிமொழியாராற் குறிப்பிடப் பெறுகின்றது. சிவானுபவம் எனினும் கடவுள் அனுபவம் எனினும் பொருள் ஒன்றே. அச் சிவானுபவத்தினை முதன் முதற் கவிதை வடிவில் உலகுக்கு வெளியிட்டு உணர்த்திய பெருமை திருவாசகப் பாடல்களுக்கே உரியதாகும். கவிதையுலகில் சிவானுபவம் என்னும் புதிய பொருளைப் புதிய முறையில், முதன் முதலாக 'நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்' பாடிக்காட்டிய நூல், திருவாசகம் எனக் கூறுதல் மிகையாகாது.

மணிமொழியாரின் சிவானுபவ மாட்சிமை:

சங்ககால நல்லிசைப் புலவர்கள் பலரும் கடவுளைப் பற்றி ஆங்காங்கே பெரிதும் குறிப்பிட்டுள்ளனர் எனினும், அவர்களெல்லாம் மாணிக்கவாசகரைப்

போலத் தாம் கடவுளை நேரே தம் கண்ணெதிரே கண்டனர் என்றும், கடவுள் ஒரு வடிவு கொண்டு போந்து தமக்கு இவ்வாறு அருள் செய்தனர் என்றும், கடவுளைக் கண்டபொழுது தாம் பெற்ற பேரின்பம் இனைத்தென்றும், காணுத போது தமக்கு எய்திய பெருந்துன்பம் இத்தகையது என்றும் யாண்டும் கூறக் காண்கிலம். ஆயின், நம் மாணிக்க வாசகரோ தாம் கடவுளை நேரே கண்டமையினையும், அவர் தம் பொருட்டு ஒரு வடிவு கொண்டு போந்து தம்மை ஆட்கொண்டருளினமையினையும், அவ்வருட் பெருக்கால் தாம் பெற்ற பெறலரிய பேரின்ப நிலைகளையும் எல்லாம் தமது திருவாசகப் பாடல்களில் அழகுற மிழற்றுகின்றார். "கண்ணால் யானும் கண்டேன் காண்க! அருள்நனி சுரக்கும் அமுதே காண்க! கருணையின் பெருமை கண்டேன் காண்க! புவனியிற் சேவடி தீண்டினன் காண்க! சிவனென யானும் தேறினன் காண்க! அவன் எனை ஆட்கொண்டருளினன் காண்க!" என வரும் திருவாசக வரிகள், எல்லாம் வல்ல சிவமாகிய கடவுள் மாணிக்கவாசகர்க்குக் கண்ணெதிரே தோன்றிக் காட்சி கொடுத்துக் கரைகடந்த பேரருளால் ஆட்கொண்டு காத்த அருமைப்பாட்டினை எத்துணைத் திட்பமுற விளக்குகின்றன. சிவத்தின் எல்லையற்ற பேரருளால் தாம் எய்திய பேரின்ப நிலையினை மாணிக்க வாசகர் போல விளக்கும் வாய்ப்பினைச் சங்க கால நல்லிசைப் புலவர்கள் எவரும் பெற்றிலர்! மாணிக்க வாசகரின் இத்தகைய சிவானுபவ மாட்சிமையினை உணர்ந்தேயன்றோ இராமலிங்க அடிகளும்,

"தேசகத்தில் இனிக்கின்ற
தெள்ளமுதே! மாணிக்க
வாசகனே! ஆனந்த
வடிவான மாதவனே!
மாசகன்ற நீ, திருவாய்
மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம், நான்
அனுபவிக்க அருளுதியே"

என் வேண்டிக்கொள்வாராயினர்! மேலும், இது பற்றியே, ஆசிரியர் நச்சினார்க்கினியர் தாமும் தமது திருமுருகாற்றுப் படையுரையில், "கந்தழியாவது ஒரு பற்றும் அற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்" எனக் கூறி, அதனை வலியுறுத்துதற்கு "உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம் போல் பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என வரும் திருவாசகப் பகுதியினை மேற்கோள் காட்டி, மாணிக்க வாசகரைக் கந்தழியினை "உணர்ந்தோர்" எனப் போற்றிச் சிறப்பித்தார்!

(வரும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கையேதான் உற்பத்தி செய்யும்; அதைப்போல சுற்றறிக்கைகளிலிருந்து இன்னும் பல சுற்றறிக்கைகள், அவற்றிலிருந்து இன்னும் பல என்று இவ்வாறு போய்க்கொண்டேயிருந்தால் வேலையை யார் செய்வார்கள்? அறிக்கைகளின் அமல் ஆபீஸோடு சரி; நாம் கிராமங்களில் போய்ச் செய்ய வேண்டுவது வேலையே இந்த வேலை நாம் வீடு வீடாக நுழைந்து புறப்படாத வரையில் நடைபெறாது. ஆனால் நாம் கிராமங்களுக்கெல்லாம் போவதற்கு நமக்கு முக்கிய சாதனமாய் உதவக் கூடியது கருத்துப் பிரசாரமொன்றே. ஆகவே அதற்கான திட்டத்தை நாம் வகுக்க வேண்டும்.

கருத்துப் பிரசாரம்:

நமக்குத் துணிவில்லை. ஆகையால் சட்டம் இயற்றுதல் போன்ற குறுக்குப் பாதையை விரும்புகிறோம். சட்டம் வரட்டும், கட்டாயம் வரட்டும், நல்ல உருவில் விரைவில் வரட்டுமென்று இவ்வகையில் நாம் முயன்றுகொண்டிருப்போமானால் அது நாம் பரதர்மத்தை அனுஷ்டித்ததாகுமே அல்லாது சுதர்மத்தைச் செய்ததாகாது. நாம் செய்யவேண்டியது கருத்துப் பிரசாரமே. கருத்துப் பிரசாரத்தின் மூலமாகவே நம் வேலை நிறைவேறும்.

—ஆசார்ய விநோபா.

(சர்வோதய பிரகடனம்)

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

53 கிடங்குத் தெரு, சென்னை 1.

அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)

சித்தாந்தப் பேராசிரியர் சிவகுருநாதர்

(ந. ரா. ஆடலரசு)

செந்தமிழ் நாட்டிற் பொது மக்கள் ஆதரவு பெற்றுக் கால முறைக்கேற்பச் சிவநெறி உண்மைகளைப் பரப்பத் தோன்றிய சபைகளுள் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையும், நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபையும், திருச்சி மலைக் கோட்டை சைவ சித்தாந்த சபையும், பூவாளூர்ச் சைவ சித்தாந்த சபையும், சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜமும், தென்னிந்திய சிவனடியார் திருக் கூட்டமும் நாடறிந்த பழம் பெரும் அமைப்புகள்.

அவைகளுள் தூத்துக்குடி சபையின் தொண்டராகவும், தலைவராகவும், ஆசிரியராகவும் இருந்து நீண்ட காலமாகச் சுத்தாத்வைத சித்தாந்த நுண் பொருள் விளக்கி வந்த சைவப் பெரியார் சிவத்திரு. ந. சிவகுருநாதம் பிள்ளை அவர்கள்.

இனி, நம் சிவகுருநாதர் அவர்கள் எட்டயாபுரம் அரச மரபினர்க்கு மருத்துவம் செய்யும் வேளாளப் பெருங்குடியில் 1873 ஆம் ஆண்டில் தோன்றி, கற்பன கற்றுத் தமிழிலும் ஆங்கிலத்திலும், சைவ சாத்திரங்களிலும் சிறந்து, தூத்துக்குடியில் மிளிர்ந்தார்.

கப்பலோட்டிய தமிழர் எனப் போற்றப்படும் வ. உ. சி அவர்கள் நம் ஆசிரியரின் பள்ளித் தோழர் என்பதோடு, அவருடைய பொதுத் தொண்டுகளிலும் இவர் ஒன்றுபட்டு அரசியலாரின் ஒறுப்புக்கும் ஆளாகியிருக்கிறார். வ. உ. சி. யின் விடுதலைப் போராட்ட வழக்கை உயர் நீதி மன்றம் வரையில் விடாப் பிடியாகக் கொண்டுபோய் ஓரளவு வெற்றியும் பெற்றவர் சிவகுருநாதர்.

தூத்துக்குடி எஸ். எ. உயர் நிலைப் பள்ளியில் சிலகாலம் தமிழாசிரியராக இருந்தும், 'சைவப் பிரகாசம் பிரசு' என்னும் அச்சகத்தை அமைத்தும் அவர்கள் செய்த தமிழ்ச் சைவத் தொண்டுகள் அளவிலவாகும்.

சைவ சித்தாந்த சண்ட மாருதம் எனப் பெயரெடுத்து இந்த நாட்டில் சென்ற தலைமுறையில் சிறந்த பேரறிஞராய்ச் சமயவாதிகள் பலரையும் புறங்கண்டு வெற்றி வாரணமெனச் சுற்றிச் சொற்பொழிவாற்றிச் சித்தாந்த சைவத் தொண்டாற்றிய சிவத்திரு. சோமசுந்தர நாயகர் அவர்களையே சிவகுருநாதர் தமது ஆசிரியராகக் கொண்டார்.

சமய, விசேட, நிருவாண தீக்கைகள் பெற்றுக் கடந்த 50 ஆண்டுகட்கு மேலாக முறையாகச் சிவ பூசை செய்து கொண்டும், சித்தாந்த பாடங்கள் நடத்திக் கொண்டும் பல சைவத் தமிழ்க் கூட்டங்களிலும், மாநாடுகளிலும், சிறந்த சொற்பொழிவாற்றிக் கொண்டும் வந்த நம் ஆசிரியர் அவர்களால் ஆண்களிலும் பெண்களிலும் நூற்றுக் கணக்கான அன்பர்கள் உண்மையறிவும் ஒழுக்க வாழ்வும் பெற்றுச் சிறந்திருக்கிறார்கள்.

முதிர்ந்த வயதில் அவர்களைச் சிறப்பிப்பதற்காகச் செய்யப் பெற்ற ஆண்டு நிறைவு விழாப் பேரவைகளில் எல்லாம் அவர்கள் அறிஞர் பலரைச் சிறப்பித்து அவரவர்கட்குத் தக்க பட்டங்களை வழங்கி வந்தார்கள்.

நம் குருகுல ஆசிரியர் அவர்கட்குச் 'சித்தாந்தச் செஞ்ஞாயிறு' எனப் பட்டமளித்துப் பாராட்டியவரும் சிவகுருநாதர் அவர்களே.

உயர்ந்த சமய ஒழுக்கத்தோடு கூடிய தமிழறிவும் சாத்திர அறிவும் பூண்டு, தொண்டு வாழ்க்கையில் மிளிர்ந்த அவர்களை நமது நாடு என்றும் மறவாது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

7\. திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே.

வலிய மலையாகிய வில்லுக்கு ஓர் சரங் கூட்டிப் பொல்லாரை மாய்த்து நல்லாரைக் காக்க வல்லவனும் நீயே.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில்" என்பதால் மேற் சொல்லியது நன்கு புலனாகும்.

8\. திருவையாறு அகலாத செம்பொற் சோதீ—

ஐந்து ஆறுகளால் சூழப்பட்டு இதினின்றும் அகலாது இருக்கும் செம்பொற் சோதி மயமானவனே;

"சிவாயநம" என்னும் ஐந்து எழுத்துக்களினின்றும் அகலாது உள்ளிருக்கும் சோதி மயமானவனே.

நதி— கிழக்கு நோக்கி ஓடும் யாறு; நதம்—மேற்கு நோக்கி ஓடும் யாறு.

இவ் விளக்கம் சைதைத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழக வார வழிபாட்டில் திருவள்ளுவரகம் ப. இராமநாத பிள்ளை அவர்கள் வழங்கியது.

என்றார் பிறனறிதலாவது அறக்கூறுபாடும் வாய்ப்பும் தம்மனோர் ஊனும் அறிதலாம். ஆள்வினையாதலாவது அருமை கருதித் தளராமையும் இடுக்கண் அழியாமையும் நிலையிழக்குந் துணைவர்க்கு ஈகையுடைமையுங் கொண்டு செயலாற்றலாம். தொழிலோர் இவ்வகையினராயின், அவரதே வெற்றியென்பது கருத்து. அடக்கு முறையினாற் பயனின்மை உணர்த்தப்பட்டது.

6. பணியாளர் எஞ்ஞான்றும்
பண்பறிந் தாற்றின்
பணிகேட்கும் ஞாலம் பரிந்து

தொழிலாளர் எப்போதும் அறவியல்பறிந்து செயல் புரிய வல்லவரானால் உலகம் அன்பு மிகுந்து அவர் செயலுக்கு மதிப்புத் தரும்.

பணி தொழிலின் மேற்று. அறம் பண்பெனப்பட்டது. தொழிற்கு அஃதியல்பாகலின், ஆற்றின் என்றார், அதன் அருமை நோக்கி. கேட்டல், ஈண்டு மதித்தலென்னும் பொருட்டு. அதனால் அவர்க்கு வாழ்வுபெருகுமென்பது கருத்து. நாட்டு மக்கள் அவர் செயலை மதிப்பராயின் அவர்தம் அலுவலகத்துத் தலைவரானும் அவர்க்கு ஆக்கமுண்டாதல் திண்ணமாகலின் என்க.

7. ஆற்றலால் அல்லன
அடியோடு [செய்யின்
தோற்றே உறுவார் துயர்.

தொழிலாளர் தமக்குள்ள ஒற்றுமை வன்மையால் அறமல்லாதன செய்தால் அவர் முற்றுந் தோல்வியுற்றுத் துன்பம் எய்துவர்.

ஏகாரம் ஈற்றசை. நிலை யிழத்தலானும், நம்பிக்கை பிறழ்தலானும், முன்னிருந்த ஒற்றுமையாற்றல் கெடுதலானும், 'உறுவார் துய'ரென்றார். இவையிரண்டு பாட்டானும் தொழிலாளர் அறமல்லன செய்தல் அடாதென அறிவுறுத்தினர்.

8. ஒற்றுமை யன்றி
உயர்துணை யொன்றில்லை
பற்றுக என்றும் பரிந்து.

தொழிலாளர்க்கு அவர்தமக்குள் உண்டாகும் ஒற்றுமையன்றி உயர்ந்த துணையாவது வேறொன்றில்லை; ஆதலால் அவர் அவ்வொற்றுமையை எஞ்ஞான்றும் உவந்து கடைப்பிடிப்பாராக.

செல்வம் கல்விநிலை முதலிய ஏனையவெல்லாம் தொழிலாளர்க்கும் பேரளவிற் கூடுதல் அரிதாகலானும், ஆயினும் ஓர் உயர்ந்த அளவிற்கு ஒற்றுமை மிகுத்தல் அவர்க் கெளிதாகலானும், பிறவெலா மிருந்தும் ஒற்றுமையின் றேற் பயன் நிலையாமையானும் அதனை 'உயர் துணை' என்றார். பரிதல் ஈண்டு விரும்புதலென்னும் பொருட்டு; ''பரிந்துரைக்க வேண்டுமோ'' (ஐங். ஐந். 29) என்புழிப்போல.

9. சிலர்கூடச் சிந்தும்;
ஒருவருக்குஞ் சேரா;
பலர் கூடி எய்தும் பயன்.

பலர் ஒன்று கூடி அவ்வொற்றுமை யாற்றலால் அடையும் பயன் சிலர்மட்டுங் கூடுதலாற் சிதறிப் போம். ஒருவருக்குங் கூடாது.

கூடும் சிலர்க்கும் பயனில்லை என்றவாறு. பின்னும் வலியுறுத்தற்கு ஒருவருக்குஞ் சேராதென்றார். சேரா, ஈறு தொகுத்தல். இவை இரண்டு பாட்டானும் தொழிலாளர் வளர்ச்சிக்காவதொரு கருவி கூறினர்.

10. உழைப்போ டொழுக்கம்
உளதேல் தொழிலோர்க்
கிழுக்கும் இடும்பை இல.

உழைப்போடு ஒழுக்கமும் கூடியுளதானால் நிலை தளரச் செய்யுந் துன்பங்கள் தொழிலாளர்க்கு இல்லை.

உம்மைவிகாரத்தாற்றொக்கது; உழைப்பால் வறுமை நீங்குதல் போல ஒழுக்கத்தால் இன்னல் நீங்குமாதலின் 'இடும்பை இல' என்றும், தொழில் செய்வார்க்கு உழைப்பு இயல்பாயிருத்தலின் அவர்க் கிழுக்கல் செய்வதெல்லாம் அவரது ஒழுக்கமின்மையேயாதல் வேண்டுமாகலின் 'ஒழுக்கம் உளதேல் இழுக்கும் இடும்பை இல' என்றுங் கூறினர். தொழிலாளர்க்கு ஒழுக்கம் இன்றியமையாததென்பது இதனால் உணர்த்தப்பட்டது.

தங்களுக்குத் தேவையான
எல்லா விதமான மருந்து வகைகளும்
எங்களிடம் எப்பொழுதும்
கிடைக்கும்.

மேயர் அண்டு கம்பனி,

இங்கிலீஷ் மருந்து வியாபாரிகள்,
16. ஐயா பிள்ளை தெரு,
பி. டி. சென்னை-3.

டெலிபோன் 3757 போஸ்டு பாக்ஸ் நெ 504.

மொழித் துறை

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.

(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

அதிகாரம் 19.

தொழிலாளன்

அஃதாவது அறத்தாற் பொருது உரிமை நிலைத்தபின் உலகத்தின்கண் பல்வகையாலும் ஆக்க வேலைகள் நிகழல் வேண்டுமாகலின் அதற்கு இன்றியமையாததான தொழிலைச் செய்வானது நிலை கூறினார். அதிகார முறைமையுங் காண்க.

1. என்றுந் தொழில்புரியும்
ஏழைத் தொழிலாளன்
இன்றேல் இயங்கா துலகு.

தன் வாழ்நாள் முழுதுந் தொழில் செய்து வாழும் ஏழைத் தொழிலாளன் இல்லையாயின் உலகம் நடவாது.

உலகத்திலுள்ளோர் வாழ்க்கை நடைபெறாதென்றற்கு 'உலகு இயங்கா'தென்றார். உலகு ஆகுபெயர். உலக வாழ்க்கைக்குத் தொழில் இன்றியமையாததென்பதாம். ஏழைத் தொழிலாளன் தனது பிழைப்பின் பொருட்டு என்றுந் தொழில் புரியும்படி நேர்தலின், 'என்றுந் தொழில் புரியும்' எனவும், தொழிலாளன் நாளும் தன் தொழிலுக்குரிய கூலியை பெறாதலின், 'ஏழைத் தொழிலாளன்' எனவுங் கூறினார். இச் செய்யுளால் தொழிலாளரின் இன்றியமையாமை உணர்த்தினார்.

2. உண்ண உணவற் றொடுங்க
ஒருபுறத்தே
என்னே பொருள்குவியு
மாறு.

ஏழைத் தொழிலாளன் உண்ண நல்லுணவின்றி ஒரு பக்கம் தாழ்வுற்றிருக்க மற்றொரு பக்கமாகிய முதலாளியினிடத்துச் செல்வம் ஒருங்கு திரளு நிலை தான் என்னையோ!

குவியுமாறு என்னும் மாறீறு குவிதல் என்னும் பெயர்ப் பொருள் தந்தது. என்னே என அந் நிலை நினைந்து வியந்தார். தொழிலாளன் என்பது அதிகாரத்தாற் பெற்றாம். உண்ணவும் என்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

3. உழைப்பார் ஒருகோடி,
உண்பார் சிலரே;
பிழைப்பும் உழைப்புக் கிலை.

கோடிக் கணக்கில் தொழிலாளர் தொழில் நிலையங்களில் உழைப்பர் ஆனால், அந் நிலையங்களின் தலைவர் சிலரே அவ்வுழைப்பின் பயனை உண்பர்; வாழ்க்கையின் இன்றியமையாமையாகிய பிழைப்புக் கூட உழைப்புக்கு ஊதியமாகக் கிடைக்கவில்லை.

கோடி, ஆகுபெயர்; உம்மை, இழிவு சிறப்பு. பிழைப்பாவது உண்ணல் உடுத்தல் தங்கல் முதலியன. அவைதாமும் போதியவாகவும் நல்லவாகவுங் கிட்டாமையின் 'பிழைப்பும் இலை' என்று கூறினார். இவை இரண்டு பாட்டானுந் தொழிலாளரின் குறைகள் எடுத்துக் காட்டப்பட்டன.

4. சேர்பொருளோர் நிற்பரோ
செய்தொழிலைச் செய்யாது
சேர்ந்து நிறுத்தப் பெறின்.

தொழில் செய்வார் தாம் செய்யுந் தொழிலைச் செய்யாமல் தம்முள் ஒன்று சேர்ந்து தந் தொழிலை நிறுத்த வல்லவராயின், திரளுஞ் செல்வமுடையோராகிய முதலாளிகள் தம் நிலையில் நிலைப்பரோ.

நில்லார் என்றார்; தம் நிலை கவிழ்வர் என்றபடி. சேர்ந்து நிறுத்தலை வலுப்பெற்றுப் பயன்றருதலின் அவ்வாறு கூறினார். அவ்வலிமையின் பயன் வருஞ் செய்யுளாலும் விளங்கும். இதனால் மேலெடுத்துக் காட்டிய குறைகளை நீக்கிக்கோடற்கு ஒரு வாயில் கூறினார்.

5 சூழ்படையால் என்னும்
தொழிலோர் திறனறிந்து
ஆள்வினைய ராகப் பெறின்.

தொழில் செய்வார் வகையறிந்து தொழில் நிறுத்தத்தை நடத்தும் முயற்சியுடையராகப் பெற்றால், அவர் செயலைத் தடுத்தற்கு அவரைச் சுற்றி வளைத்துக்கொள்ளும். படைஞரால் யாது பயனுண்டாம்?

படை, படைஞரை உணர்த்திற்று; ஆயுதந் தாங்கியோர் படைஞரெனப்பட்டனர், ஒற்றுமையும் ஊனும் உறுதலாகிய உள்ளத்தின் செயலுக்குப் புறக் கருவிகளின் தாக்குதல் ஆற்றாதாகலின் 'என்னும்'

* ஒண்சுடர் மாண்பு *

எண்டிசைக்கும் ஒண்சுடராய்
நின்றாய் நீயே
யேகம்ப மேய இறைவன் நீயே
வண்டிசைக்கு நறுங்கொன்றைத்
தாராய் நீயே
வாரா உலகருள வல்லாய் நீயே
தொண்டிசைத்து உன் அடிபரவ
நின்றாய் நீயே
தூமலர்ச்சே வடிஎன்மேல்
வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரங்கூட்ட
வல்லாய் நீயே
திருவையாறு அகலாத
செம்பொற் சோதீ!

—ஆளுடைய அரசு

1. எண்டிசைக்கும் ஒண் சுடராய் நின்றாய் நீயே—

பெருந்திசை நான்கு. சிறு திசை நான்கு. ஆக எட்டுத் திசையும் தன் ஆட்சிக்குள் இருப்பதாலும், எங்கும் ஆண்டவன் நீக்கமற நிறைந்து இருப்பதாலும் ஒளி பொருந்திய சுடராய் நிற்பவனும் நீயே. என்று ஆண்டவனை முன்னிலைப்படுத்திக் கூறி இருக்கிறார்.

ஒண் சுடர்—மங்காத சுடர்; சுடருக்கும் சுடர் தரும் சுடர். சூரியன், சந்திரன் மங்கும் சுடர். இவைகளுக்கும் ஒளி கொடுப்பவன் ஆண்டவன். ஆதலால் ஒண் சுடர் என்றார்.

ஒண்மை—அறிவு

ஆகவே ஆண்டவன் அறிவுச் சுடராய், ஞான மயமாய் இருக்கின்றான். "கல்லாதான் ஒட்பங் கழிய நன்றாயினும் கொள்ளார் அறிவுடையார்" என்னும் குறளும் இங்குக் கருதற்பாலது. ஒண்சுடர் என்பதற்கு எடுத்துக் காட்டாக,

"சோதியே சுடரே
சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே
பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத்
திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன்
ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே"

என்னும் திருவாசகமும் உன்னற்பாலது.

நிற்றல்—எப்பொழுதும் மங்காமல் இடைவிடாமல் இருப்பது. "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பதில் நிற்க என்பது 'வழுவாமை' என்பதால் நின்றாய் என்பது நன்கு விளங்கும்.

2. ஏகம்ப மேய இறைவன் நீயே—

(காஞ்சியில்) ஒரு மா மரத்தின் கீழ்ப் பொருந்தி இருக்கின்ற தலைவனும் நீயே ஆவாய்

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்பதாலும் "முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்" என்பதாலும் இறைவன் என்பது நன்கு விளங்கும். இறை—எங்கணும் நீக்கமற உறையும் உயிர்த் தலைவன்.

3. வண்டிசைக்கு நறுங்கொன்றைத் தாராய் நீயே—

வண்டுகள் பூவிலுள்ள தேனை உண்ணவே பாடிக்கொண்டு இருக்கும். இப்படித் தேன் கொழித்து மணங் கமழ்கின்ற கொன்றை மாலையை அணிந்து இருப்பவனும் நீயே.

"கண்ணிகார் நறுங்கொன்றை வண்ண மார்பில் தாருங் கொன்றை" என்பது புறநானூறு, கடவுள் வாழ்த்து.

4 வாரா உலகருள வல்லாய் நீயே—

போய் மீண்டும் வாராத உலகத்தை அருள வல்லவனும் நீயே. "கொடை மடம் படுதல் அல்லது படை மடம் படான்" என்பது போல, யாவராலும் தரமுடியாத பேரின்பத்தைத் தரும் வன்மையைக் கொண்டவனே ஆண்டவன் என்பது விளங்கும்.

5. தொண்டிசைத்து உன் அடிபரவ நின்றாய் நீயே—

தொண்டின் பெருமையை எடுத்துச் சொல்லி, தொண்டு செய்யச் சொல்லி, ஆண்டவன் திருவடியை எப்பொழுதும் நினைக்கும்படி நிற்பவனும் நீயே.

6 தூமலர்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே—

வண்டுண்ணாத சுத்தமான மலர் போன்ற செம்மையான திருவடியை அடியேன் மீது வைத்தவனும் நீயே.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் **P. O.**
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை	விசய, பங்குனி,	தளிர்
6	2-4-54 வெள்ளி.	24

கருத்துப் புரட்சி

கருத்தாட்சி என்றால் கருத்தைத் தான் புரிந்துகொள்ளுதலும் பிறருக்கு அறிவுறுத்துதலுமாகும். கருத்தைப் புரிந்துகொள்ளாமல் நாம் எந்த விஷயத்தையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. பிறர் ஒரு விஷயத்தில் அடங்கியுள்ள கருத்தைப் புரிந்துகொள்ளாமலே அதை ஏற்பார்களானால் நாம் அவர்களின் போக்கிற்காக வருந்தவேண்டும். நாம் நம் விருப்பத்தைப் பிறருக்கு விளக்கிக் கூறுவதோடு திருப்தியுறவேண்டுமே அல்லாது அவர்கள் மீது அதைச் சுமத்தக் கூடாது. சர்வோதய சமாஜத்திற்கென நாம் வகுத்துள்ள திட்டத்தை, அதன் அமைப்பைச் சிலர் 'loose' அல்லது திட்டவட்டமாயில்லாதது என்று கூறுகிறார்கள். அமைப்பை, உருவை நாம் செம்மையாகச் செய்யாவிட்டால் வேலை எதுவும் நடைபெறாது. இதனால் அமைப்பு செம்மையற்றதாக இருத்தலாகாது அதை அமைப்பு என்று அழையாது அமைப்பின்மை என்றே அழைக்கலாம். அதாவது நாம் அப்பொழுது கருத்தொன்றையே கொண்டு நிற்கிறோம் என்றாகிறது. எவருக்கும் நாம் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் எதையும் செய்யும்படி ஏவல்பிறப்பிப்பதில்லை. நாம் செய்வதெல்லாம் வெறும் ஆலோசனையே. குரானில் பக்தர்களின் இலக்ஷணங்கள் கூறப்படுகின்றன. அதில் ஆலோசனைகளின் மூலமாக ஆட்சியை நடத்துவோமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் கருத்தை விளக்கிக் கூறுவதன் மூலமாக அதை அமுலுக்குக் கொண்டு வருவோமானால் எனக்கு மகிழ்ச்சி உண்டாகும். விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் எதையும் செய்விப்பதைப் பார்க்க எனக்கு வருத்தமுண்டாகிறது. இதில் காணப்படும் தென்பு வேறெந்த அதிகாரத்திற்குட்பட்ட கட்டுப்பாட்டுடன் அமைந்த அமைப்பிலும் எனக்குத் தென்படுவதில்லை. அதில் சக்தி என்னவோ காணப்பட்ட போதிலும் சுபகரமான அறிவின் சேர்க்கை இருப்பதில்லை. நாம் விரும்புவது அந்த அறிவின் சேர்க்கையையே. ஆகையால் கருத்தாட்சியை நாம் ஏற்கவேண்டும். இது நமக்குப் புரியுமானால் கருத்துக்களை இடையறாது பிரசாரம் செய்துகொண்டிருப்பதே நமது வேலை என்பதும் புலனாகும். இவ்வகையில் நான் சிந்திக்கும்பொழுது புத்த பகவான் பிக்ஷு சங்கம் அமைத்ததிலும் சங்கராச்சாரியார் துறவிகளின் சங்கம் அமைத்ததிலும் அடங்கியுள்ள ரகசியம் எனக்குப் புலனாகிறது. ஆனால் அத்தகைய சங்கங்களை நாம் அமைக்க விரும்பவில்லை. ஏனெனில் அவைகளினால் விளையும் நன்மைகளை விடத் தீமைகளே அதிகமாயிருக்கின்றன. ஆகையால், நாம் சங்கங்களை அமைக்காமலே அவர்கள் சங்கம் அமைத்ததன் காரணத்தைப் புரிந்துகொண்டால் போதுமானது. மலையிலிருந்து விழும் நீர் அருவிபோல சதா சுற்றிக்கொண்டு மக்களை அணுகி இடையறாது விஷயங்களை விளக்கிக் கூறிக்கொண்டேயிருப்பவர்கள் தேவை. ஒரு முறை எடுத்துக் கூறும்பொழுது மக்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்றால் மறுமுறை கூறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது என்ற காரணத்திற்காக மகிழ்ச்சி கொள்ளவேண்டும். கருத்துக்களைப் பரப்புவதில் இவ்வளவு உற்சாகமும், சிரத்தையும், உறுதியும் நமக்கிருக்கவேண்டும். ஆனால் நாமோ வெவ்வேறு ஸ்தாபனங்களில் சிக்கிக்கொண்டு விட்டோம். அந்த ஸ்தாபனங்கள் பெருமை பொருந்தியவையாயிருந்தபோதிலும் நமக்கு அவைகளிடம் பக்தியிருக்கவேண்டுமேயல்லாது பாசம் கூடாது. அதன் காரியங்களைச் செய்துகொண்டிருக்க வேண்டியதுதான். ஆனால் சிலர் சுற்றிக்கொண்டும் வேலை செய்துகொண்டிருக்க வேண்டும் இத்தகைய அமைப்பை நாம் உருவாக்காவிட்டால் கருத்து வறண்டுபோக, கருத்தாட்சி ஏற்படாமற்போய்விடும்; வேறு எந்த ஆட்சியையும் நாம் அமைக்க விரும்பவில்லை.

நான் வேடிக்கையாகச் சொல்வதுண்டு: இனம் தன் இனத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)